கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

தமிழ் 1 (மாதிரி வினாத்தாள்:03)

**Tamil I**

**72 T I**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

**அறிவுறுத்தல்கள்:** பகுதி **I** இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி I

**01.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(i)** **ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ**
**அணி பூண் அணிந்த யானை இயல் தேர்**
**அதியமான் பரிசில் பெறூஉங் காலம்**
**நீட்டினும் நீட்டாது ஆயினும் யானை தன்**
**கோட்டிடை வைத்த கவளம் போல**
**கை அகத்தது அது பொய் ஆகாதே**
**அருந்த ஏமாந்த நெஞ்சம்**
**வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே.**

(அ) இப்பாடல் பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ஆ) இப்பாடல் இடம்பெற்றுள்ள பரிசில் கடாநிலைத்துறையை விளக்குக.
(இ) இப்பாடலில் பாடப்பட்டோனின் கொடை மாண்பினை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

**(ii)** **குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்**
**தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான் -**
**நகை மிக, கண்கள் தீ நாற, நாசியில்**
**புகை உற, குனிப்புறும் புருவப் போர்விலான்.**

(அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ஆ) இப்பாடலில் குறிப்பிடப்படும் குகனின் சீற்ற மெய்ப்பாடுகள் யாவை?
(இ) குகன்,''பெயரிய கூற்றின் ஆற்றலான்'' எனக் குறிப்பிடப்பட்டதிற்கான காரணம் யாது?

(12 புள்ளிகள்)

(24 புள்ளிகள்)

**02.**பின்வரும் (அ)கவிதையை **அல்லது** (ஆ) உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**(அ)பின்வரும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

தேவரெல்லாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்துகடல் சூழுமெங்கள் தேயம். (தேவர்)



kalvi.lk

எத்திசையும் போற்றுங் கதிர் காம மலை நாட்டில்
எங்கள் வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமலபீடம்
பொலியுமலை எங்கள் மலை ஈழமெங்கள் தேயம். (தேவர்)

மாவலிகங் கைப்புனலாந் தாவணியைவீசி
மாதிரமெல் லாம்மணக்கும் வாசனையைப்பூசி
காவலரின் கண் மருட்டுங் கன்னி எங்கள் தேயம்.
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை. (தேவர்)

செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனை வேறில்லை. (தேவர்)

பொற்புதையல் கண்டெடுப்பார் போலச்சிலமந்தி
பூமியுள் வெடித்த பலாப் பொற் சுளையைக் கீண்டும்
நற்குணங்கொள் மங்கையரும் மைந்தர்களும் போல
நாலுகின்ற பூங்கொடியில் ஊசல் சிலவாடும். (தேவர்)

மானின் கவைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி
வளமானபன்றிமுள்ளுக் கைம்மரங்கள் பாய்ச்சி
கானிலுதிர் மாமயிலின் தோகை கொண்டு வேய்ந்து
கட்டியதனுள் ளிருந்து சிற்றில் சிலவாடும். (தேவர்)

கனிபெறவென் றொரு குறத்தி காதணியைவீசக்
கடுவனதைக் கைப்பிடித்துக் காதலிதன் காதில்
நனியழுத்தக் கண்ணினின்று நீர்வடியும் வாயில்
நகைவருமக் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம். (தேவர்)

(i) குறம் என்றால் என்னவெனக் குறிப்பிட்டு,ஈழநாட்டுக் குறம் எனும் கவிதையினூடாக கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயத்தை எடுத்துக்காட்டுக.

(ii) அதனை வெளிப்படுத்த கவிஞர் கையாண்டுள்ள உத்திகளைக் குறிப்பிட்டு, விளக்குக.

(iii) ஈழநாட்டின் வளம் பற்றி கவிஞர் குறிப்பிடுவன யாவை?

(iv) ஈழ நாட்டின் பெருமைக்குரிய அம்சங்களாக கவிஞர் குறிப்பிடுவன யாவை?

(16 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு முன் சென்ற கவிகுல திலகங்களை தமிழ்ப்பெருங் கவிஞரை நினைவு கூர்ந்த வேளைகளில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே குறிப்பிட்டிருக்கின்றார். ஔவையார் முதல் இராமலிங்கர் வரை பல புலவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் சிறப்பியல்புகளை விவரித்திருக்கிறாரெனினும் வேற்று மொழியாளரும் ஏற்றுப் போற்றக்கூடிய தமிழ்க் கவிஞர்களாக முற்கூறிய மூவரையுமே குறிப்பிட்டார்.

பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது.

வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் பாரதிக்கு முன்னரே தமிழ் இலக்கிய உலகில் பெருமைக்குரியவர்களாய்க் கருதப்பட்டவர்கள். ''கல்வியிற் பெரியர் கம்பர்'' என்ற முதுமொழி நன்கு பிரசித்தமாதே. வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப்புலவர்கள் இல்லை என்றே கூறிவிடலாம்.



kalvi.lk

சிலம்பின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம்வரை படர்ந்திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின் அதுவே நம்மவர்க்கு ஆதாரமான அளவு கோலாயிற்று. பாரதியார்பாராட்டியதாலும் முன்சென்ற மூவர்க்கும் பெருமை பெருகியிருக்கிறது. இவ்விடத்தில் ஒன்று கவனிக்கத்தக்கது. தனக்கு முன்னிருந்த பெருங்கவிஞரை இனங்கண்டு வரிசையறிந்து பாரதியார் கூறும் பொழுது அறிந்தோ அறியாமலோ தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே அவர்களை வரிசைப்படுத்தியிருப்பான் என்று கூறுவது தவறாகாது.

பொதுவில் நாம் ''இலக்கியம்'' என்று கூறும்பொழுது நம் உள்ளத்தில் - சிந்தனையில் - பல எண்ணக்கூறுகள் ஏககாலத்தில் எழுகின்றன. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றிற்கேற்ப இலக்கியம் பற்றிய 'வரைவிலக்கணம்' வேறுபடும். எனினும் சாதாரணமாக, சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர்நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர். இது ஒரு கவிஞனின் பொது இலக்கணம்.

(i) ஒரு கவிஞனின் பொது இலக்கணமாகவும் கவிதையின் உயிர் நாடியாகவும் கட்டுரையாசிரியர் குறிப்பிடுவன யாவை?

(ii) பாரதியாரின் ஆற்றல்களாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுவன யாவை?

(iii) முப்பெரும் கவிஞர்களும் பாரதிக்கு முன்பே செல்வாக்குப் பெற்றமையை எடுத்துக்காட்டுக.

(iv) கட்டுரையாசிரியர் இப்பகுதியில் கையாண்டுள்ள மொழிநடையின் பண்புகளை எடுத்துக்காட்டுக.

**(16 புள்ளிகள்)**

03. **குற்றம் கடிதல்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குற்றம் கடிதல் என்பதனால் கருதப்படுவது

(ஆ) வள்ளுவர் குறிப்பிடும் குற்றங்கள்

(இ) குற்றங் கடியுமாறு

(ஈ) குற்றங் கடியாமையால் ஏற்படுவன

(உ) குற்றங் கடிதலுக்காக வள்ளுவர் கையாழும் உவமைத்திறம்

**(20 புள்ளிகள்)**

04. **கம்பராமாயணம் குகப்படலத்தில்** சுமந்திரன் குகனைப் பற்றிப் பரதனுக்குக் கூறியது முதல்_குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவுதல் வரையுள்ள பகுதியில்,

(அ) சுமந்திரன் குகனைப் பற்றிப் பரதனுக்குக் கூறியவையும் அதனூடாக வெளிப்படும் குகனது சிறப்புக்களும்.

(ஆ) பரதனின் நிலை கண்ட குகனின் மனமாற்றம்.

(இ) ''எம்பெருமான் பின் பிறந்தவர் இழைப்பரோ பிழைப்பு'' என்று குகன் தீர்மானித்ததற்கான காரணங்கள்.

(இ) உவமை அணியினைக் கையாழுவதில் கம்பனது கவியாற்றலும்.

**(20 புள்ளிகள்)**

05. **திருப்பாணாழ்வாரரின் அமலநாதிபிரான் பதிகத்தில்** வெளிப்படம் மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) அரங்கநாதனின் தோற்றப் பொலிவு

(ஆ) திருஅரங்கத் தலச் சிறப்பு

(இ) புராண இதிகாசச் செய்திகள்

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

06. **தேம்பாவணி காட்சிப்படலத்தில்** வெளிப்படும் மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) இயேசு கிறிஸ்துவினது பெருமை

(ஆ) மரியாளின் பெருமை

(இ) யாதாயினும் **ஐந்து** உவமையணியைக் கையாழுவதில் வீரமா முனிவரின் ஆற்றல்

**(20 புள்ளிகள்)**

**07.வ.அ.இராசரெத்தினத்தின் ஒரு வெண்மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** எனும் நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாவலின் பேசுபொருளும் விபரிக்க விழைந்த விடயமும்.

(ஆ) நாவலில் வரும் நாவலில் வரும் தாய் தெய்வானை **அல்லது** கதாநாயகி சௌந்தரம் எனும் கதைமாந்தரின் குணப்பண்புகள்.

(இ) நாவலில் வெளிப்படும் உடல் உழைப்பின் முக்கியத்துவம்.

(ஈ) இந்நூலின் மூலம் பெற்றுக்கொள்ளும் கல்விசார்ந்த படிப்பினைகள்.

**(20 புள்ளிகள்)**

**08.**பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **குறுந்தொகை, 'கன்றுதன் பயமுலை…'** எனும் பாடலில் தோழியின் மதி நுட்பம் வெளிப்படுமாறு.

(ஆ) முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பியின் **'பாரதியார்'** பற்றிய கவிதையில் வெளிப்படுத்த விழைந்த விடயங்களும் அக்கருத்தைகருத்தை வெளிப்படுத்த,கவிஞர் கையாண்டுள்ள உத்திகளும்.

(இ) **'இருதுயரங்கள்'** நாடகத்தில் நாடக ஆசிரியர் வெளிப்படுத்த விழைந்த விடயமும் அதனைச் சொல்லும் விதமும்.

(ஈ) பாரதியாரின் **'பாஞ்சாலி சபதத்தில்'** சூதின் இழிவும் அந்நிலையினை தருமன் அடைந்தவாறும் சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்களும் வலியுறுத்தப்படுமாறும்.

**(20 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

தமிழ் 11 (மாதிரி வினாத்தாள்:03
**Tamil II**

**72** **T** **II**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

அறிவுறுத்தல்கள்: பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் இரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி I

**01.ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.(இவ் விடைப்பத்திரத்தையும் இணைத்துக் கொடுக்கவும்)**

**(அ)**

1.1 பின்வருவனவற்றுள் இதழ் குழிய உச்சரிக்கப்படும் உகரம்,
1. படு 2. பண்ணு 3. படகு 4. குடம் 5. புதுமை
(…….)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் ஒலிகள்,
1.ப்,ம் 2. ம,ன் 3. த்,ந் 4. வ்,ப் 5. ழ்,ள்
(…….)

1.3 எகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்,
1. எடு 2. எதை 3. எலி 4. எரு 5. எவை
(…….)

1.4 உடநிலை மெய்ம்மயக்கமாக அமையும் சொல்,
1. கத்தி 2. கயல் 3. மாஸ் 4. வம்சம் 5. சைவம்
(…….)

1.5 உடம்படு மெய் தோன்றிப் புணர்ந்த சொற்றொடர்,
1.கைப்பிடி 2. கையிருப்பு 3. கைந்நூல் 4. கைத்தடி 5. கைம்மாறு
(…….)

1.6 பகுதி இரட்டித்துக் காலம் காட்டும் சொற்கள்,
1. விட்டான்,விடுவான் 2. பெற்றான்,பெறுவான் 3. உற்றான்,உறுமினான்
4. தொட்டான்,விட்டான் 5.படித்தான்,முடித்தான்
(…….)

1.7 பின்வருவனவற்றுள் முன்னொட்டுப் பெற்று வந்த சொல்,
1. அவலம் 2. அவமானம் 3. அவசியம் 4. அவசரம் 5. அவமதி
(…….)

1.8 செய்ய எனும் வாய்பாட்டு வினையெச்சமாக சரியாக அமையாதது,
1. போ-போக 2. படி-படிக்க 3. சொல்-சொல்ல 4. வா-வர 5. செல்-சென்று
(…….)

1.9 மின்சாரம் வந்தது என்பது,
1. எழுவாய்த்தொடர் 2. வினைமுற்றுத் தொடர் 3. உவமைத்தொடர்
4. பெயரெச்சத் தொடர் 5. வினைஎச்சத்தொடர்
(…….)

1.10 நிலை மொழி ஈற்று மெய் இரட்டித்துப் புணர்ந்த சொல்,
1. கண்ணீர் 2.பண்ணிசை 3.வெண்ணிலா 4.சொன்னேன் 5.நன்நூல்
(…….)

1.11 'தீர்' எனும் சொல்லடியாகப் பிறக்காத பெயர்சொல்,
1.தீர்வை 2. தீர்ப்பு 3. தீர்த்தல் 4. தீர்த்தான் 5.தீர்த்தவன்
(…….)

1.12 செயற்படுபொருள் குன்றியும் குன்றாதும் வரத்தக்க வினைகள்,
1. ஓடு,பாடு 2. நட,கட 3. உண்ணு,எண்ணு 4. எரி,சரி 5. வெட்டு,காட்டு
(…….)



kalvi.lk

1.13 பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொற்களை மட்டும் கொண்ட தொகுதி,
1. காயச்சல்,காழ்ப்பு,முயற்ச்சி,ஈர்க்கு 2. வாய்க்கால்,கட்ச்சி,பாழ்ங்கிணறு,கூர்ஞ்சிறை
3. வறட்ச்சி,நோய்க்காவி,வாழ்க்கை,போர்ப்பறை 4. தேய்த்தான்,கால்ப்பங்கு,வியர்க்குரு,கீழ்த்திசை
5. காழ்க்கலம்,மேய்ச்சல்,நேர்த்தி,தாய்குருவி

(…….)

1.14 பின்வரும் செய்தித் தலைப்புகளில் பொருள் மயக்கமற்ற தலைப்பு,
1. பிக்கு குத்திக் கொலை 2. ஆசிரியர் வீடுடைப்பு 3. மாணவி கொலை வழக்கு
4. அதிபர் அடித்து வெளியேற்றம் 5.மாணவரைக்கைது

(…….)

1.15 பின்வரும் வாக்கியங்களில் 'இரு' என்பது துணை வினையாக வராத வாக்கியம்,
1. நான் இந்தியாவுக்குப் போயிருக்கிறேன். 2. நான் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன்.
3. நான் இந்தியப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன். 4. நான் இந்தியக் கதிரையில் இருக்கிறேன்.
5.நான் இந்தியத் திரைப்படம் பார்த்திருக்கிறேன்.

(…….)

1.16 நான் கொழும்பிலிருந்து வந்தேன். இது ஒரு,
1. தனி வாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. கலப்பு வாக்கியம்
4. வாக்கியத் தொடர் 5. மெய்ப்பாட்டு வாக்கியம்

(…….)

1.17 பின்வருவனவற்றுள் வினையெச்சத்திற்கு முடிக்கும் சொல்லாய் வராதது,
1. வினையாலணையும் பெயர் 2. குணப்பெயர் 3. தொழிற்பெயர்
4. வினையெச்சம் 5.பெயரெச்சம்

(…….)

1.18 தமிழ் மொழி செம்மொழி அந்தஸ்த்துப் பெற்றுள்ளது. இத்தொடரில் வந்த செம்மொழி என்பது,
1. உவமைத் தொகை. 2. பண்புத்தொகை. 3. ஆக்கப் பெயர்
4.கூட்டுப்பெயர் 5.ஆகுபெயர்

(…….)

1.19 பின்வருவனவற்றுள் விரவுத்திணைகள்,
1. அவர்,தாய் 2. தந்தை,பறவை 3. சேலை,பறவை 4. தாய்,தந்தை
5.பறவை,தாய்

(…….)

1.20 "சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.ஏர் ஏறாது.காளை இழுக்காது" இத்தொடரில் வந்துள்ள வினைகள்,
1. காலத்தை தீர்மானிக்கமுடியாது 2. முன்னிலை ஒருமை நிகழ்கால வினை முற்று
3. முன்னிலை ஒருமை எதிர்கால வினை முற்று 4. படர்க்கை ஒருமை நிகழ்கால வினை மற்று
5. படர்க்கை ஒருமை எதிர்கால வினை முற்று

(…….)

**(20 புள்ளிகள்)**

**02. (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கிவிட்டமைக்கும், நெருங்கிவிட்டமைக்கும் இத்தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகி விட்டது எனலாம். பழமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்) தொலைப்பதிவு(டெலக்ஸ்) இலத்திரனியல் தபால் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்ட போதும் மனிதப்பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்த தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும் உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் தேவைகளின் போதும்நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையோருடனோவாகவும் இருக்கலாம். நம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். நமது



kalvi.lk

நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனாகவும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக நாம் நீதிமன்றத்திற்குச் செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். அவ்விடத்தில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி பண்புடன் நடந்து கொள்ளவில்லையெனின் கண்டிப்புக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடலாம்.

**(13 புள்ளிகள்)**

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மனித இனத்தின் வரலாற்றில் கல்வியின் முக்கியத்தவம் பரவலான முறையில் ஏற்றுக்கோள்ளப்பட்ட உணரப்பட்டது மிக அண்மைக்காலத்ததிலேயேயாகும்.கற்றவர்களுக்குச் சிறப்பும் மதிப்பும் சென்ற இடமெல்லாம் செறிந்திருந்தாலும் கலிவியானது ஒவ்வொருவலதும் உரிமையாகும் என்பது முன்னர் உணரப்பட வில்லை எனறால் அது மிகையாகாது.அக்காலத்தில் கல்வி ஒரு தானமாககக் கொள்ளப்பட்டது. அத்தானத்தைப் பெறுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட நிலையிலுள்ள சிலருக்கு மட்டுமே சிறப்பாகன கல்வி என்ற நிலையே பரந்திருந்தது. உயர் குழுவுக்கான கல்வி,ஆளும் வர்க்கத்துக்கான கல்வி என்ற முறையில் கல்வியைப் பெற்றோர் தொகை ஒரு கால கட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டே காணப்பட்டது.மற்றையோர் எல்லாம் சாதாரண தேவைகளை நிறைவு செய்வதற்கு உதவக் கூடிய ஆரம்ப அளவிலான அறிவை மட்டுமே பெற்றிருந்தனர்.அதைத்தானும் பெறாதவர்களும் இருக்கத்தான் செய்தனர். அந்தக்காலமெல்லாம் இன்று பழங்கதையாகி,“கல்வியானது ஒவ்வோரு மனிதனதும் பிறப்புரிமையாகும்” என்ற தாரக மந்திரம் வாழ்க்கைத் தத்துவமாகிவிட்டது. இந்நிலையில் உலக ரீதியில் கல்வி தொடர்பாக அரசுக்கு இருக்கும் பொறுப்பையும் அவை செலுத்தும் கட்டுப்பாட்டையும் கவனிப்பது ஒரு கவர்ச்சியான முயற்சியாகும்.

(i) இவ்வுரைப்பகுதியின் மையக் கருத்தை பதினைந்து சொற்களில் எழுதுக.
(ii) முற்காலத்தில் கல்வி பற்றிக் கொண்டிருந்த கருத்து யாது?
(iii) இக்காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி பற்றிய கருத்த யாது?
(iv) முற்காலத்தில் கல்வியைப் பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காமைக்கான காரணங்கள் யாவை?
(v) இவ்வுரைப் பகுதியில் கூறப்பட்டவற்றிற்கு **பொருத்தமற்ற** கூற்றாக அமைவது எது?

1. கல்வியானது ஒவ்வொரு மனிதனதும் பிறப்புரிமையன்று.
2. கல்வியானது ஒவ்வொருவரதும் உரிமையாகும் என்பது முன்னர் உணரப்படவில்லை.
3. சிலருக்கு மட்டுமே சிறப்பான கல்வி என்ற நிலையே முன்னர் பரந்திருந்தது.

**(12 புள்ளிகள்)**
**(25 புள்ளிகள்)**

03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) சுவாமி விபுலானந்தரின் தமிழியற் பணிகள்
(ஆ) தொற்றா நோய்களும் மனிதவாழ்வும்
(இ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு: சவால்களும் தீர்வுகளும்.
(ஈ) வீதி விபத்துக்களைத் தடுப்போம்.
(உ) ‘கடனிலாது வாழ்வோம்’

**(25 புள்ளிகள்)**

## பகுதி II

04. (அ) சங்ககால அகத்திணை நூல்கள் எவை என்பதையும் புறத்திணை நூல்கள் எவையென்பதையும் எடுத்துக் காட்டுக.
(ஆ) புறத்திணை இலக்கியங்களின் தனித்துவப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.
(இ) சங்கமருவிய கால இலக்கியப் போக்கு சங்ககால இலக்கியப் போக்கிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றது என்பதை எடுத்துக் காட்டுக.

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

05. (அ) பல்லவர்கால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபுக்கமைய வகைப்படுத்துக.

(ஆ) பல்லவர் கால பக்திப் பாடல்களின் முக்கியமான பண்புகளைத் துலக்குக.

(இ) பல்லவர்க்கால இலக்கியங்களில் சங்ககால அகத்திணை மரபு மாற்றமடைந்தவாற்றை எடுத்துரைக்குக.

**(15 புள்ளிகள்)**

06. (அ) போர்த்துக்கேயர் கால இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

(ஆ) போத்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நோக்கமாகவே ஞானப்பள்ளும், அர்ச்.யாகப்பர் அம்மானையும் பயன்படுத்தப்பட்டவாற்றை எடுத்துக்காட்டுக.

**(15 புள்ளிகள்)**

07. பின்வருவோரில் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) அ.குமாரசுவாமிப் புலவர்

(ஆ) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

(இ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

(ஈ) கவிஞர் அப்துல் காதர் லெப்பை.

**(15 புள்ளிகள்)**

08.(அ)(i)பின்வரும் வாக்கியத்தில் உள்ள பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.

கொறோனா தொற்றினால் முக்கிய கொழும்புப் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

(ii) பின்வரும் தொடர்களை ஒரே வாக்கியமாக எழுதுக.

= நான் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டபோது சந்தைக்குப் போனேன்.

= எனக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வந்தேன்.

= நான் வீட்டுக்குத்திரும்பி வந்து சவர்க்காரமிட்டு நன்றாகச் கைகளைக் கழுவினேன்.

= நான் என் குடும்பத்தோடு தொலைக்காட்சிச் செய்தியறிக்கையை பார்த்தவாறு சாப்பிட்டேன்.

(iii) பின்வரும் வாக்கியங்களை இணைக்கும் இணைப்பிடை சொற்களையிட்டு மீண்டும் வாக்கியத்தை எழுதுக.

= அவள் வெளிநாட்டிலிருந்து வந்தாள்.

= அவள் தன்வருகையை வைத்தியப்பரிசோதனைக்குட்படுத்தவும் தவிர்த்துக்கொண்டாள்.

= அவள் பதினான்கு நாட்களுக்கு தன்னைத்தானே தனிமைப்படுத்தவும் தவறி விட்டாள்.

= அவளால் பலருக்கும் தொற்று நோய் வருவதை தடுக்கமுடியாமல் போனது.

(iv) செயற்பாட்டு வினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

- ஆசிய நாடுகளில் சீனாவில் கொறோனா கிருமிகள் பல நாட்களுக்கும் நின்று நீடித்துப் பரவாதவாறு கட்டுப்படுத்தப்பட்டன.

(v) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவை நீக்கி எழுதுக.

- நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சில அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணைக்கப்பட்டுள்ளது.

**(10 புள்ளிகள்)**

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஐகாரக்குறுக்கம்

(ii) கூட்டுப் பெயர்

(iii) செயப்பாட்டு வினை

**(05 புள்ளிகள்)**
**(15 புள்ளிகள்)**



kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page